## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.54/2023

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு ஜனவரி மாதம் 23 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : தனம்மாள் | மதம் | : இந்து |
| க/பெ | : சுப்பிரமணி | ஜாதி | : -- |
| வயது | : 60 | கிராமம் | : பொன்பாடி |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

<u>23.01.2026</u>
<u>வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

4. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 9 ஆன ஆவண எண்.39/1982 உயில் யார் யாருக்கு எழுதி கொடுத்து என்பது தெரியுமா என்றால் என் கணவர் மீதுதான் எழுதியிருக்கிறார்கள். எனக்கு வழக்கு சொத்து பற்றிய எந்த விவரமும் தெரியாமல் வழக்கு பற்றிய விவரமும் தெரியாமல் இந்த பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 7 பட்டாவிற்கும் வழக்கு சொத்து விவரத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 8 வில்லங்க சான்றின் 2ம் பக்கத்தில் சொல்லப்பட்டுள்ளர் 5377/2011ன்படி 1ம் பிரதிவாதி ஆறுமுகம் மனை எண்.16ஐ கிரையம் பெற்றுள்ளார் என்றாலும் நாங்கள் அதை மறைத்து புகைப்பட நகல் எடுத்து தாக்கல் செய்துள்ளோம் என்றாலும் சரியல்ல. 2011லேயே மனை எண்.15, 16ஐ 1ம் பிரதிவாதி ஆறுமுகம் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் நாங்கள் கிரையம் வாங்கியுள்ளோம்.

5. நாங்கள் எங்கள் வழக்கில் 2012ல் கிரையம் வாங்கியுள்ளதாக சொல்லியுள்ளோம் என்றால் அதற்கு முன்பே எங்களுக்கு கிரையம் கொடுத்தவர் வாங்கியுள்ளார். வா.சா.ஆ4ன்படி என் கணவர் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் ஆமாம். கிரையம் வாங்கும்போது என் கணவர் வில்லங்க சான்று வாங்கி பார்த்தாரா என்றால் அது எனக்கு தெரியாது. ஏற்கனவே 2011லேயே மனை எண்.16 ஆறுமுகம்

கிரையம் வாங்கிய பின்பு மோசடியாக என் கணவர் 2012ல் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் இல்லை. அதற்கு முன்பே எங்களுக்கு கிரையம் கொடுத்தவர் வாங்கிவிட்டார். வழக்கு சொத்தை முன்பே கிரையம் வாங்கியதாக சொல்லும் முன் பாத்தியஸ்தர்கள் யாரும் அவர்கள் பெயருக்கு பட்டாவை மாற்றவில்லை என்றால் அது எனக்கு தெரியாது. என் கணவருக்குதான் தெரியும். என் கணவரை இந்த வழக்கில் விசாரிக்கபோகிறேனா என்றால் ஆமாம்.

6. என் கணவருக்கு விற்றவருக்கு சொத்தை தவறுதலாக வாங்கியுள்ளோம் என்பது தெரிந்துதான் பட்டாவை வாங்காமல் இருந்துள்ளார்கள் என்றாலும் என் கணவரும் 2011ல் ஆறுமுகம் என்பவர் கிரையம் வாங்கி சுவாதீனத்தில் உள்ளார் என்பது தெரிந்தும் மோசடியாக வாங்கியுள்ளோம் என்றால் சரியல்ல. ஆறுமுகம் மனை எண்.15, 16ஐ கிரையம் வாங்கியவுடன் அவர் பெயருக்கு புல எண்.273/23க்கு பட்டா எண்.4236ல் பட்டா மாற்றிவிட்டார் என்றால் நாங்கள்தான் பட்டா வாங்கியுள்ளோம். நான் வாங்கியுள்ள பட்டாவே புல எண்.273/26க்கு வாங்கியுள்ளோம் என்றாலும் அதற்கும் வழக்கு சொத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. நாங்கள் பட்டா வாங்கியுள்ள சொத்திற்கான நான்கு எல்லைகள் தவறானது என்றால் சரியல்ல.

7. என் கணவர் தான் வாங்கிய சொத்து தவறானது என்பது தெரிந்துதான் என் பெயருக்கு சொத்தை மாற்றிவிட்டார் என்றால் இல்லை. என் கணவருக்கு உடல்நிலை மோசமாக இருந்ததால் என் பெயருக்கு சொத்தை மாற்றிவிட்டார். வழக்கு சொத்து ஆண்டாள், புஷ்பா, ஷியாமளா, நிர்மலா ஆகியோர் சேர்ந்து வாங்கிய சொத்து என்று வழக்கில் சொல்லியுள்ளேன் என்றாலும் ஆனால் எனது பிரமாண வாக்குமூலத்தில் வா.சா.ஆ 9 ஆன ஆவண எண்.39/1982 உயிலின்படி கிடைத்ததாக முன்னுக்கு பின் முரணாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கை நிராகரிக்க கோரி தாக்கல் செய்த மனுவில் நாங்கள் தாக்கல் செய்த பதிலிலும் அவர்கள் வடுவாம்பாளின் பிள்ளைகள் என தவறாக சொல்லியுள்ளோம் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ 9 ஆன ஆவண எண்.39/1982 உயிலின்படி அவர்கள் யாருடைய பிள்ளைகள் என்பது தெரிந்தும் அவர்கள் வடுவாம்பாளின் பிள்ளைகள் என இடைமனுவில் தவறாக சொல்லியுள்ளோம் என்றாலும் சரியல்ல.

8. ஆண்டாள், புஷ்பா, ஷியாமளா, நிர்மலா ஆகியோர் புல எண்.273/10க்கான

மனை எண்கள் 38, 39, 40, 41, 42, 43, 44 ஆகியவை தான் அவர்களுக்கு உரிமையானது என்றாலும் அவர்களுக்கிடையேயான பாகப்பிரிவிலும் மேற்படி மனை எண்களைதான் அவர்கள் பிரித்துக்கொண்டார்கள் என்றாலும் அவர்கள் மனை எண்.16ஐ பாகப்பிரிவினையில் குறிப்பிடவில்லை என்றாலும் மனை எண்.16க்கும் அவர்களுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் வழக்கு சொத்தை நீதிமன்ற ஆணையர் மூலம் நியமணம் செய்ய கோரியிருப்பதில் வழக்கு சொத்துதான் நான் சொல்லும் புல எண்ணில் உள்ளது என்பதை நிரூபிக்க இன்றுவரை ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்ல முடியுமா என்றால் எங்கள் சொத்தை நாங்கள் ஏன் அளக்க வேண்டும்.

9. நாங்கள் சொல்லும் மனை எண்.16ஐ ஆறுமுகமும் 2011ல் கிரையம் வாங்கிய நிலையில் விளம்புகை கோராமல் உறுத்துக்கட்டளை கோரியிருப்பது தவறானது என்றால் அவர்கள் அந்த இடத்தில் வீடு கட்டுவதற்காக மண் கொட்டியபோது நாங்கள் போய் கேட்டதற்கு காலியிடம் என்பதால் கொட்டி வைத்திருப்பதாகவும் பின்பு எடுத்துவிடுவதாகவும் சொன்னார்கள். நான் பொன்பாடியில் வசித்துவருகிறேன் என்றாலும் அவர்கள் வழக்கு சொத்தில் மண் கொட்டியதாக நான் போய் கேட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. 2011 முதல் ஆறுமுகம்தான் வழக்கு சொத்தில் அனுபவத்தில் உள்ளார் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் சொத்தின் நான்கு எல்லையை காண்பித்து இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

10. வழக்கு சொத்தின் நான்கு எல்லை சொல்ல முடியுமா என்றால் எனக்கு அவர்கள் பெயர் தெரியாது. பொய்யான ஆவணத்தை உற்பத்தி செய்த தேதியில் இருந்து நாங்கள் வழக்கு சொத்தை போய் பார்த்ததில்லை என்றால் அவ்வப்போது போய் பார்த்து வருவேன். வீடு கட்ட வசதியில்லாததால் இதுவரை கட்டவில்லை. என் கணவர் மீது வாங்கிய பட்டா பொய்யானது என்றால் சரியல்ல. 2012ல் வழக்கு சொத்திற்கு தவறான நான்கு எல்லை காண்பித்து பொய்யான ஆவணத்தை உற்பத்தி செய்து இதுவரை அனுபவத்தில் இல்லாத சொத்திற்கு காலம் கடந்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எந்த வழக்கு மூலமும் இல்லை

என்றால் சரியல்ல. நான் பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் இந்த வழக்கை தாக்கல் செய்ய எனக்கு எந்தவித முகாந்திரமும் இல்லை என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்தின் எல்லைகள் படி மனை எண்.16 ஆறுமுகத்தின் அனுபவத்தில்தான் உள்ளது என்றாலும் வழக்கு சொத்திற்கு சம்மந்தமே இல்லாத புல எண்ணிற்கு பட்டா வாங்கி வைத்துள்ளோம் என்றாலும் சரியல்ல. எனவே நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)